மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிவகாசி
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 05 ம் நாள் வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண். 04/2025
இன்
அசல் வழக்கு எண்.14/2024
-------

மாரிச்சாமி .. மனுதாரர்/வாதி

/எதிர்/

1. மாரி என்ற மாரியப்பன்
2. வருவாய் வட்டாட்சியர்,
   சாத்தூர்.
3. மாவட்ட ஆட்சியர், விருதுநகர்
4. சரவணக்குமார் .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 01.06.2026 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. ஜெயபாண்டி, அவர்கள் ஆஜராகியும், 1, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. D. பாஸ்கரன், அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி மகன் சரவணக்குமார் என்பவரை 4ம் உத்தேச பிரதிவாதியாக சேர்த்து வழக்கினை நடத்த உத்தரவிட வேண்டி கட்டளை 1 விதி10(2) மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u>–

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை பரிகாரமும் அதன் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். பிராது தபசில் சொத்தானது ஆதியில் ராமலிங்க மூப்பர் மகன் முத்துப்பாண்டிக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டதாகும். மேற்படி முத்துப்பாண்டி மூப்பரிடமிருந்து அழகமூப்பர் மகன் பாலுச்சாமி மூப்பர் அவர்கள் கடந்த 16.07.1971ம் தேதி பந்தல்குடி சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.702/1971ன் படி கிரையம் பெற்று அவரது அனுபவத்திலும், ஆளுகையிலும் இருந்து வந்துள்ளது. மேற்படி பாலுச்சாமி மூப்பரிடமிருந்து மனுதாரர் கடந்த 05.09.2007ம் தேதி பந்தல்குடி சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.2182/2007 படி கிரையம் பெற்று தபசில் சொத்தில் தென்னை கீற்றாலான செட் அமைத்து எவ்வித இன்னலும் இடையூறுமின்றி ஆண்டனுபவித்து வருகின்றார்.

2.2. பிராது தபசில் சொத்தானது கிராம கணக்கில் நத்தம் புறம்போக்கு என குறிப்பிடப்பட்டிருந்ததால் வாதி இலவச வீட்டுமனை பட்டாவுக்கு விண்ணப்பித்து 2ம் பிரதிவாதியான சாத்தூர் வருவாய் வட்டாட்சியர் அவர்களால் கடந்த 25.10.2007ம் தேதி வீட்டுமனை ஒப்படைப்பு உத்திரவும் பெற்று ஆண்டனுபவித்து வருகின்றார். இந்நிலையில், 26.10.2023ம் தேதி தபசில் சொத்தில் மனுதாரரது அனுபவத்தை எதிர்மனுதாரர் இடையூறு செய்ததால் அன்றையதினம் இருக்கண்குடி காவல் நிலையத்தில் புகார் மனு அளித்துள்ளார். புகார் மனு விசாரணையில் சிவில் சம்மந்தமான பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க கூறியுள்ளார்.

2.3. அசல் வழக்கில் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வருகின்றார். இந்நிலையில் கடந்த 24.06.2024ம் தேதி எதிர்மனுதாரர் மற்றும் அவரது மகன் சரவணக்குமார், மனுதாரர் வெளியூர் சென்ற நாளில் தாவா சொத்தில் கம்பிவலை அமைத்து பெட்டி கடையை மனுதாரரது இடத்தினுள் நகர்த்தி

வைத்துவிட்டு அதன்பின் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். எதிர்வழக்குரையில் தபசில் சொத்தில் 1ம் பிரதிவாதி மகன் சரவணக்குமார் கம்பிவலை அமைத்து கடை வைத்துள்ளதாக கூறியுள்ளார். எனவே 1ம் பிரதிவாதியின் மகன் சரவணக்குமார் அவ்வழக்கில் அவசிய கட்சிகாரர் ஆவார். மேற்படி சரவணக்குமாரை இவ்வழக்கில் 4ம் உத்தேச பிரதிவாதியாக சேர்க்க வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேற்படி 4ம் உத்தேச பிரதிவாதியை இவ்வழக்கில் கட்சியாக சேர்க்காமல் இருக்கும்பட்சத்தில் மனுதாரரது தரப்பிற்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல்.

3. **<u>இ.ம.எண்.03/2024-ல் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு இ.ம.எண்.04/2025 எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம் –</u>**

**3.1.** இதனடியில் வியாத்தமாய் ஒத்துக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்ற சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவைகள். அவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். தபசில் சொத்து தொடர்பாக ஏற்கனவே வாதி இலவச வீட்டுமனை பட்டாவுக்கு விண்ணப்பித்ததன் பேரில் கடந்த 25.10.2007ம் தேதி வீட்டுமனை ஒப்படைப்பு உத்தரவு வழங்கப்பட்டுவிட்டது. அதனால் இந்தநிர் 2ம் எதிர்மனுதாரர் மீது பரிகாரம் கோர இயலாது. தாவா மனுவிற்கு இந்த எதிர்மனுதாரர் தேவையற்ற கட்சிக்காரர் ஆவார். தாவா மனு சொத்தில் வாதியின் அனுபவத்தை யார் இடையூறு செய்தார் என்று தாவா மனுவில் எங்கும் குறிப்பிட கிடையாது. மேலும் கடந்த 24.06.2024ம் தேதி எதிர்மனுதாரர் நான் வெளியூர் சென்ற நாளில் தாவா சொத்தில் கம்பிவேலி அமைத்ததாக கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. தாவா சொத்தில் யார் கம்பி வேலி அமைத்தார் என்று தெளிவாக சொல்ல கிடையாது. எனவே தாவா மனுவானது இந்த எதிர்மனுதாரர் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

4. **<u>4ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்–</u>**

4.1. இதனடியில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர

இதர சங்கதிகள் யாவும் உண்மைக்குப் புறம்பானவைகள் மற்றும் கற்பனையானவைகள் ஆகும். அவைகளனைத்தும் இந்நிர் எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகின்றன. சாத்தூர் வட்டம், கோசுகுண்டு வருவாய் கிராமம், நத்தம் புது சர்வே எண்.824/10, 824/11 மற்றும் தபசில் சொத்து அமைந்துள்ள 824/12 ஆகிய சர்வே எண்களில் உள்ள இடங்கள் ஆதியில் லேட். ராமலிங்க மூப்பர் மகன் தொத்தன் என்ற கருப்பசாமிக்கு பாத்தியப்பட்ட இடங்களாகும். மேற்படி இடங்களுக்கு பழைய நத்தம் சர்வே எண்.28 ஆகும். கடந்த 16.04.1997ம் தேதியன்று மேற்படி நத்தம் சர்வே எண்.28ல் வடபகுதியினை தொத்தன் என்ற கருப்பசாமி அவரது உடன்பிறந்த தம்பி ராமமூப்பர் மகளும், 1ம் எதிர்மனுதாரரின் மனைவியும் இந்நிர் 4ம் எதிர்மனுதாரரின் தாயாருமான இந்திராகாந்திக்கு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதிக் கொடுத்துள்ளார்.

4.2. மேற்சொன்ன உயிலானது பந்தல்குடி சார்பதிவாளர் அலுவலக பத்திர எண்.14/1997 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன பழைய நத்தம் சர்வே எண்.28 ஆனது சர்வே எண்கள் 824/10, 824/11 மற்றும் தபசில் சொத்து அமைந்துள்ள 824/12 என அடங்கிய பல உட்பிரிவுகளாக செய்யப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன சர்வே எண்.824/10 ஆனது 1ம் எதிர்மனுதாரரின் மனைவியும், இந்நிர் எதிர்மனுதாரரின் தாயாருமான இந்திரா காந்தியின் பெயரில் இருந்து வந்துள்ளது. அவர் காலமானபின்பு அவரது கணவரான 1ம் எதிர்மனுதாரரின் பெயரில் பட்டா மாறுதல் உத்தரவு 28.08.2003ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் இரண்டு வீடுகள் கட்டி அனுபவித்து வருகின்றார்.

4.3. சர்வே எண்.824/11 ஆனது இந்நிர் எதிர்மனுதாரரின் பெயரில் பட்டா வழங்கப்பட்டு அந்த இடத்தில் விவசாய விளைபொருட்கள் சேமித்து வைக்கும் இடமாகவும் மற்றும் பல மரங்கள் வைத்தும் அனுபவித்து வருகின்றார். தபசில் சொத்து அமைந்துள்ள சர்வே எண்.824/12 நிலத்துண்டானது இந்நிர் எதிர்மனுதாரரின் தந்தை வழிப்பாட்டியான அழகம்மாளுடன் அவரது மகனான 1ம்

எதிர்மனுதாரர் மற்றும் 4ம் எதிர்மனுதாரர் ஆகியோர்கள் அனுபவித்து வந்துள்ளார்கள். அவ்வாறு அனுபவம் செய்து வந்த நிலத்தினை இந்நிர் எதிர்மனுதாரரின் தந்தை வழிப்பாட்டி அழகம்மாள் 1ம் எதிர்மனுதாரர் ஆகியோர்கள் சம்மதத்தோடு இந்நிர் 4ம் எதிர்மனுதாரர் அவரது பெயரில் பட்டா கோரி விண்ணப்பம் செய்திருந்ததன் அடிப்படையில் இந்நிர் 4ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 20.01.2005ம் தேதியன்று அரசால் ஒப்படைவு செய்யப்பட்டது. மேற்படி ஒப்படைவு செய்யப்பட்ட நிலத்தில் ஆஸ்பெஸ்டாஸ் மற்றும் தென்னங்கீற்றுகளால் கூரை வேய்ந்து ஆடுமாடுகளை கட்டியும் மாட்டு தீவனங்களை வைத்தும் ஆஸ்பெஸ்டாஸ் மற்றும் கூரை போட்ட கட்டிடத்தின் ஒரு பகுதியில் மரப்பலகையால் செய்யப்பட்ட பலசரக்கு கடை வைத்தும், மரங்களை வைத்தும், கல்தூண்கள் நட்டி இரும்பு முள் வேலி அமைத்து அனுபவித்து வருகின்றார். மீதமுள்ள பகுதியில் இந்நிர் எதிர்மனுதாரர் இ-சேவை மையம் நடத்தி வருகின்றார். மேற்படி 4ம் எதிர்மனுதாரர் நடத்தி வரும் பலசரக்கு கடைக்கு அவரது தந்தையான 1ம் எதிர்மனுதாரர் பெயரில் அரசு உரிமம் பெற்றும் தீர்வைகள் செலுத்தியும் அனுபவித்து வருகின்றார்.

4.4. இதற்கிடையில் மனுதாரர் கடந்த 22.10.2023ம் தேதி இரவு 07.00 மணியளவில் மது அருந்திய நிலையில் அடியாட்களுடன் வந்து தபசில் சொத்தில் இந்நிர் 4ம் எதிர்மனுதாரர் தொழில் பார்த்துக் கொண்டிருக்கும்போது கடை அகற்ற வேண்டுமென்று தகராறு செய்து மிரட்டினார்கள். அக்கம்பக்கத்தவர்கள் வந்து மனுதாரரை கண்டித்தார்கள். அந்த சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது மகனான 4ம் எதிர்மனுதரர் கடைகளை காலி அகற்றாவிடில் தீ வைத்து கொளுத்திவிடுவதாக மனுதாரர் மிரட்டி சென்றுள்ளார். உடனே 1ம் எதிர்மனுதாரர் 23.10.2023ம் தேதி இருக்கண்குடி காவல் நிலையத்தில் மனுதாரர் மீது புகார் கொடுத்ததன் பேரில் மனுதாரரையும் 1ம் எதிர்மனுதாரரையும் விசாரித்து மனுதாரரின் சட்டவிரோத செயல்களை காவல் நிலைய அதிகாரி கண்டித்தும் எச்சரித்து அனுப்பியுள்ளார். தாவா அசல் வழக்கில் இந்நிர் 4ம் எதிர்மனுதாரர் அவசியமான

கட்சிக்காரர் என்று நன்கு தெரிந்தபோதிலும் தாவா வழக்கினை வீண் காலதாமதம் செய்ய வேண்டுமென்பதற்காகவும், இந்நிர் 4ம் எதிர்மனுதாரரை வீண் அலைக்கழிப்பு செய்ய வேண்டுமென்பதற்காகவும் தாவா மனுவினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை இந்நிர் 4ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6.** **<u>தீர்வு</u>**

**6.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி மகன் சரவணக்குமார் என்பவரை 4ம் உத்தேச பிரதிவாதியாக சேர்த்து வழக்கினை நடத்த உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர் கூறும் காரணம் என்னவென்றால், அசல் வழக்கில் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வருகின்றார். இந்நிலையில் கடந்த 24.06.2024ம் தேதி எதிர்மனுதாரர் மற்றும் அவரது மகன் சரவணக்குமார், மனுதாரர் வெளியூர் சென்ற நாளில் தாவா சொத்தில் கம்பிவலை அமைத்து பெட்டி கடையை மனுதாரரது இடத்தினுள் நகர்த்தி வைத்துவிட்டு அதன்பின் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். எதிர்வழக்குரையில் தபசில் சொத்தில் 1ம் பிரதிவாதி மகன் சரவணக்குமார் கம்பிவலை அமைத்து கடை வைத்துள்ளதாக கூறியுள்ளார். எனவே 1ம் பிரதிவாதியின் மகன் சரவணக்குமார் அவ்வழக்கில் அவசிய கட்சிகாரர் ஆவார். மேற்படி சரவணக்குமாரை இவ்வழக்கில் 4ம் உத்தேச பிரதிவாதியாக சேர்க்க வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேற்படி 4ம் உத்தேச பிரதிவாதியை இவ்வழக்கில் கட்சியாக சேர்க்காமல் இருக்கும்பட்சத்தில் மனுதாரரது தரப்பிற்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல்.

6.2. எதிர்மனுதாரர்கள் தங்களுடைய ஆட்சேபணையில், தாவா வழக்கினை

வீண் காலதாமதம் செய்ய வேண்டுமென்பதற்காகவும், இந்நிர் 4ம் எதிர்மனுதாரரை வீண் அலைக்கழிப்பு செய்ய வேண்டுமென்பதற்காகவும் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

6.3. வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வாதுரைகள் கேட்கப்பட்டது. இம்மனுவை பொறுத்து மனுதாரரும், உத்தேச பிரதிவாதி தரப்பினரும் 4ம் எதிர்மனுதாரர் அவசியமான கட்சிக்காரர் என்ற சங்கதியை ஒத்துக் கொண்டுள்ளனர். எனவே வழக்கை முன்னெடுத்துச் செல்ல 4ம் எதிர்மனுதாரர் அவசிய தரப்பினர் என்ற காரணத்தினால் இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் பால் உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 05-ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** – இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** –இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்
இ.ம.எண்.04/2025
இன்
அ.வ.எண்.14/2024
**உத்தரவு**
நாள்–05.06.2026.